
செய்தி இதழாகப் பதிவு பெற்றது.

2 3/6/70 808 Am

# தந்தி

University of Jaffna Sri Lanka
RECEIVED
'87 7 - 8
Periodicals Division
Library

இல: 1044 | 1970 ஜூன் 1 திங்கட்கிழமை | ★ விலை சதம் 5



புதிய அரசாங்கத்தின் மந்திரி சபையைச் சேர்ந்த மந்திரிகள் இராணி மாளிகையில் பதவி ஏற்ற பின் மகாதேசாதிபதி திரு- வில்லியம் கொபல்லாவ, பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருடன் காணப்படுகின்றனர்- இடமிருந்து வலமாக முன்வரிசையில், திருவாளர்கள் பி- பி- ஜி- களுகல்ல, டி- பி- இலங்கரத்தின, பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, மகாதேசாதிபதி திரு- வில்லியம் கொபல்லாவ, திருவாளர்கள் சேனநாயக்க, மைக்கல் சிரிவர்தன, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, தே- பி- ரத்நயக்க, டி- பி- சுபசிங்க, ஆர்- எஸ்- பெரேரா ஆகியோரர் உள்ளனர்- பின்வரிசையில், திருவாளர்கள் ஹெக்டர் கொப்பேகடுவ, டி- பி- தென்னக்கூன், ஜோர்ஜ் ராஜபக்ஷ, டாக்டர் என்- எம்- பெரேரா, திருவாளர்கள் பீட்டர் கெனமன், ஜே- எம்- ஜயமான, டாக்டர் பதியுதீன் மஹ்மூத், திருவாளர்கள் லெஸ்லி குணவர்தன, டபிள்யூ- பி- ஜி- ஆரியதாச, டாக்டர் கொல்வின் ஆர்- டி சில்வா, திரு- செ- குமாரசூரியர் ஆகியோர் காணப்படுகின்றனர்-

(ம)

## சகல இனத்தவரும், சகல மதத்தினரும் இடம் பெறும்

# கூட்டணி மந்திரி சபை நேற்றுபதவிஏற்றது

**ஈழத்து அரசியல் வரலாற்றிலேயே முதல் தடவையாக சகல இனத்தவரும், சகல மதத்தினரும் அங்கம் வகிக்கும் மந்திரி சபை ஒன்று நேற்று பதவி ஏற்றது. பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் தலைமையிலான இந்த மந்திரி சபையில் 21 பேர் இடம் பெற்றுள்ளனர்.**

தமிழரான திரு. செ. குமாரசூரியர் தபால் தந்தி அமைச்சராகவும், முஸ்லிம் பிரமுகரான டாக்டர் பதியுதீன் மஹ்மூத் கல்வி அமைச்சராகவும், பறங்கியர் சமூகத்தைச் சேர்ந்த திரு. பீட்டர் கெனமன் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். பறங்கியர் ஒருவர் மந்திரியானது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

மொத்தம் 21 மந்திரிகள் உள்ள இந்தக் கூட்டணி மந்திரி சபையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 17 பேரும், சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த 3 பேரும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் அடங்குவர்.

இந்த மந்திரி சபையில் இடம் பெற்றுள்ளவர்களில் 13 பேர் புதியவர்கள் ஆவர்- மற்றும் 8 பேர் ஏற்கனவே திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் முந்திய மந்திரி சபையில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

மகாதேசாதிபதியின் ராணி மாளிகையில் புதிய மந்திரி சபை பதவி ஏற்றதும் மகாசங்கத்தினர் பிரித் ஓதினர். அதன் பின்னர் ராணி மாளிகையின் வாசல்படிக்

(4-ம் பக்கம் பார்க்க)

**மீனாட்சி**



வாரத்தில் ஒருநாளாவது மக்களை சந்தியுங்கள் என்று புதிய மந்திரிமாரை பிரதமர் கேட்டிருக்கிறார். அப்படியானால் இனி நாங்கள் எங்கடை எம். பி. மாருக்குப் பந்தம் பிடிக்கத் தேவையில்லை தானே......! (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதவைப் பூட்டி கட்டிலில் படுத்திருக்கையில்

# டாக்டர் மீது அசிட் வீச்சு

# மனைவி பிணையில் விடுதலை

### மனநோய் பீடித்தவர் என வழக்கறிஞர் தெரிவித்தார்

**தூங்கிக் கொண்டிருந்த டாக்டர் ஒருவர் மீது அசிட் திராவகம் வீசிய சம்பவம் சம்பந்தமாக பொலீஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அந்த டாக்டரின் மனைவி எனக் கூறப்படும் பெண்ணுக்கு பிணை விதிக்கப்பட்டது.**

கொழும்பு மேலதிக நீதவான் திரு. ஜி. எப். எச். அத்துருபான 500 ரூபா பிணை விதித்தார். மாரனெல் பீரிஸ் என்பவரே இப்பெண்ணுவார்.

டாக்டர் எச். எஸ். பிரேமநாத் பீரிஸ் மீது அசிட் வீசி கடுமையான காயம் ஏற்படுத்திய சம்பவம் சம்பந்தமாக பொலீஸில் செய்யப்பட்ட புகாரை அடுத்து மாரனெல் பீரிஸ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

சம்பவதினம் இரவு பிரேமநாத் பீரிஸும் சந்தேகப் பெண்மணியும் படுக்கை அறையில் கதவுகளைப் பூட்டிவிட்டு படுத்ததாகவும் கொஞ்ச நேரத்தின் பின்னர் தண்ணீர் பதார்த்தம் ஒன்று உடம்பின் மீது கொட்டுண்டதால் உடம்பு எரிவு கண்ட டாக்டர் பீரிஸ் திடீரென எழுந்து லைட்டைப் போட்டு பார்த்தபோது சந்தேகப் பெண் அங்கு இருக்கவில்லை என்றும் பொலீஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகப் பெண் ஒரு வைத்திய மாணவி என்றும் அவர் மனநோயினால் பீடிக்கப்பட்டு முல்லேரியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றதாகவும் அவர் அடிக்கடி மனவியாதியால் பீடிக்கப்படுபவர் என்றும் அவர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் நீதவானிடம் தெரிவித்தார்.

சந்தேகப் பெண்ணுக்கு பிணை விதித்த நீதவான் மேல் விசாரணையை ஜூன் மாதம் 9-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ர)

### புதிய அமைச்சர்கள் பலர் கருமங்களை ஆரம்பித்தனர்

நேற்று காலை சத்தியப்பிரமாணம் செய்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் புதிய அமைச்சரவையின் சில அமைச்சர்கள் நேற்றே தமது கருமங்களை ஆரம்பித்தனர்.

சுகாதார அமைச்சர் திரு. டபிள்யூ. பி- ஜி- ஆரியதாச, அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நோயாளர்களுக்கு இருநேரமும் சோறு கிடைக்கக்கூடிய திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டார்.

ஆஸ்பத்திரி நோயாளருக்கு வெகு விரைவில் சோறு வழங்க நடவடிக்கை எடுக்கும்படி தனது அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு மந்திரி உத்தரவிட்டார்.

நிதி அமைச்சர் டாக்டர் என். எம்- பெரேரா நேற்று தனது அமைச்சுக்கு சென்று அங்குள்ள ஊழியர்களுடன் அளவளாவினார்.

திறைசேரியின் காரியதரிசி திரு- எம்- ராஜேந்திரா, பி- சி. உடுவெல ஆகிய சிரேஷ்ட அதிகாரிகளின் மத்தியில் பேசிய நிதி அமைச்சர். சிரமம் பாராது உழைக்கும் காலம் வந்து விட்டது என்றார். கருமங்களை துரிதப் படுத்த "மக்கள் கமிட்டி" அமைக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

தனது அமைச்சுக்கு நேற்று சென்ற போக்கு வரத்து மந்திரி திரு. லெஸ்லி குணவர்தன, அமைச்சு ஊழியர்களால் வரவேற்கப்பட்டார். இ- போ- ச- சேவை சீர்குலைந்திருப்பதால் பிரதான காரியாலயத்துக்குச் சென்று புனரமைப்பு செய்வதாக அமைச்சர் தெரிவித்தார். (ர)

### வெளிநாட்டு பயணங்கள் மீது தடை விதிப்பு

பொலீஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளவர்கள், விசாரணை முடிவடையும் முன்னர் நாட்டில் இருந்து வெளியே செல்வதற்கு புதிய அரசாங்கம் தடை விதித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்தத் தடை உத்தரவு ஆகஸ்ட் 31-ம் திகதி வரை அமுலில் இருக்கும்.

இது சம்பந்தமாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் புதிய விதிப்படி. பொலீஸ் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளவர்கள் நாட்டை விட்டு வெளியேற விரும்பினால் முதலில் பொலீஸ் திணைக்களத்திடம் அனுமதி பெறவேண்டும்.

இதற்கிடையில், இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு பலர் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்களுள் பெரும்பாலானவர்கள் பறங்கியர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஆஸ்திரேலியா சென்று குடியேறுவதற்கு மனுச் செய்துள்ளதாகத் தெரிகிறது.

மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் வர்த்தகத்துறையைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகளும் இவர்களுள் அடங்கி உள்ளனர்,

### வகுப்பு மாறி ரயில் பயணம் செய்த 1036 பேர் கைது

குறைந்த வகுப்பு ரயில்வே டிக்கட்டுகளுடன் பிரயாணம் செய்ததாக ஒரு மாத காலத்தில் 1036 பேர்களை ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்தனர்.

ஏப்ரல் மாதத்தில் மட்டும் ரூபா 7051-93 மேலதிக கட்டணமாகவும், அபராதமாகவும் இவர்களிடம் இருந்து அறவிடப்பட்டுள்ளது.

ஆனல் இதே மாதத்தில் 7 ரயில்கள் தடம்புரண்டன. மூன்று பேர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டனர். மூன்று தற்கொலை முயற்சி சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

பாணந்துறையில் ரயிலில் பிரயாணம் செய்த பெண்ணிடமிருந்து தங்கச் சங்கிலி ஒன்றைப் பறிக்க முயன்ற ஒருவரை பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்தனர்.

மற்றும் ரயிலில் கசிப்பு கொண்டு சென்ற சிலர் அனுராதபுரத்திலும் ரூகமையிலும் கைது செய்யப்பட்டனர்.

### இஸ்ரவேலுக்கு விமானம்

வாஷிங்டன், மே, 31

யுத்தத்தின்போது இஸ்ரவேல் இழந்த பெண்டம் ஜெட் விமானங்களுக்குப் பதிலாகப் புதிய விமானங்களைக் கொடுத்து உதவுவதுபற்றி நிக்ஸன் நிர்வாகம் பரிசீலனை செய்து வருவதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### ஊழியர் மீண்டும் வேலை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்தத்தை அடுத்து சேவையில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட அநேக ஊழியர்கள் நேற்று மீண்டும் சேவைக்கழைக்கப்பட்டனர்.

ஒலிபரப்பு, தகவல் அமைச்சர் திரு. ஆர்- எஸ்- பெரேரா நேற்று ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்குச் சென்றதும் செய்த முதலாவது கருமம் இதுவாகும். (ர)


**நல்லரண் கோலுமாக**

அமைச்சர் அவை அமைக்கப்படலாயிற்று- சத்தியப் பிரமாணமும் நிகழ்ந்தாயிற்று- நாட்டின் அபிவிருத்தியையும், நாட்டு மக்களின் முன்னேற்றத்தையும் நல்வாழ்வையும் தம் குறிக்கோளாகக் கொண்டு உழைக்க முற்பட்டுள்ள அமைச்சர்களுக்கு நாட்டு மக்களின் நல்வாழ்த்துக்கள் உண்டு- நாட்டில் போதிய உண்டியின்றி வாடுவோரும், உறையுளின்றி உழல்வோரும் பலருளர் என்றார் முதல் அமைச்சர் திருமதி பண்டாரநாயக்கா அவர்கள் தமது முதலாவது ஒலிபரப்பில் இப் பிரச்சினைகளும், இவை போன்ற மற்றும் பல்வேறு பிரச்சினைகளும் நாட்டை விட்டு அகலுவதற்கான உழைப்பில் அமைச்சர் அவை ஈடுபடும் என்றே நம்புகிறோம்- சாதி மத பேதமின்றி எல்லவரும் நல்வாழ்வு வாழ, நீதியும் நியாயமும் விளங்கப் புதிய அமைச்சர் அவை நல்லரண்கோலுமாக!

தந்தி


### கெய்ரோவுக்கு விமானம் கடத்தல்

ரோமாபுரி நோக்கிச் சென்று கொண்டிருந்த இத்தாலிய ஜெட் விமானம் ஒன்றை ஒரு இத்தாலியர் பொம்மைத் துப்பாக்கி ஒன்றைக் காட்டி கெய்ரோவுக்குக் கடத்திச் சென்றார்-

உயர்ந்து வளர்ந்திருந்த இந்த இத்தாலியர் தனது பொம்மைத் துப்பாக்கியை விமானத்தில் வைத்து விட்டு இறங்கி வந்த சமயம் கெய்ரோப் பொலீஸார் அவரைக் கைது செய்தனர்.

பொம்மைத் துப்பாக்கியைக் காட்டி இவர் ஒரு தடவை விமானத்தைத் திசை திருப்பியபோது, விமானத்தில் இருந்த 30 பிரயாணிகளும் ஐந்து மணி நேரம் பீதி அடைந்து போய் இருந்தனர்,

இந்த விமானம் ஜெனீவாவில் இருந்து ரோமாபுரி நோக்கிப் புறப்பட்டபோது மேற்கூறப்பட்ட துப்பாக்கி நாடகம் ஆரம்பமாகியது.

துப்பாக்கி ஒன்றுடன் காணப்பட்ட அந்த இத்தாலியர் முதலில் ஆபிரிக்காவை நோக்கி விமானத்தைத் திசை திருப்பும்படி உத்தரவிட்டார்.

பின்னர் தனது மனதை மாற்றிக் கொண்டு திரிபோலிக்குச் செல்லுமாறும் பேருட்டுக்குச் செல்லுமாறும் சொன்னார்- பின்னர் கெய்ரோ செல்லுமாறு விமானிக்கு உத்தரவிட்டார்.

இடையில் எரிபொருள் பெறுவதற்காக விமானம் நேப்பிள்ஸில் இறங்கியது,


**தந்தி**
**சிறு விளம்பரங்கள்**

**வசியம**

காதலில் வெற்றியை எதிர் பார்ப்பவர்களுக்கு தவறுத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொலை.

R- 65012

**பிரசித்த ஏல விற்பனை**

நாவலப்பிட்டி கொற்மலி ரோட் 33-ம் நிர். கடையில் நகை அடைவு பிடிக்கும் ஆர். கே. சிவனப்பன் அவர்களிடம் 3-4-67 முதல் 31-3-69 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1970 ஜூன் மாதம் 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி தொடக்கம் குறித்த கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**A.M.சோமசுந்தரம்**
வெந்திஸ் மேஸ்தர்.
அட்டன்.
29-5-70

**பிரசித்த ஏல விற்பனை**

பொகவந்தலாவ பிறயிட்டுவெல் பஜார் 89-ம் நிர். கடையில் நகை அடைவு பிடிக்கும் பி. ஊளி அவர்களிடம் 28-2-66 முதல் 30-4-69 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1970 ஜூன் மாதம் 24-ம் திகதி புதன்கிழமை காலை 11 மணி தொடக்கம் குறித்த கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**A.M.சோமசுந்தரம்**
வெந்திஸ் மேஸ்தர்.
அட்டன்.
29-5-70


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழக்கு விசாரணையில் நீதவான் கூறினார்

# 6 அல்ல 150 இருந்தாலும் பணம் கட்டத்தான் வேண்டும்

கண்டி, மே. 31

திருமணமான தனக்கு ஆறு பிள்ளைகள் இருப்பதாக கூறிய ஒருவர் மனுதாரரான பெண் ஜீவனாம்சம் கோரும் பிள்ளை தன்னுடையது அல்ல என்றும் அதனால் ஜீவனாம்சம் செலுத்த முடியாது என்றும் நீதிமன்றத்தில் உருக்கமாக மன்றாடினார். ஆனால் அவரது மன்றாட்டை நீதவான் நிராகரித்தார்.

கண்டி நீதவான் திரு. எப். பி. ஜி. பெர்னாண்டோ முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டது. ஏ. எம். பால மெனிக்கா இவ்வழக்கில் மனுதாரராவார். ஏ. எம். ஹீன்பண்டா எதிர்மனுதாரர்.

எதிர்மனுதாரரின் ஆசை நாயகியாக வாழ்ந்ததால் தனக்குப் பிறந்த பிள்ளைக்கு ஜீவனாம்சம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மனுதாரின் பிள்ளை தன்னுடையது அல்ல என எதிர் மனுதார் கூறினார்.

நீதவான்:- இதற்கு முன்னர் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மனுதாரரின் பிள்ளை உம்முடையது என நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டீர்.

எதிர்மனுதார்:- ஐயா! நான் திருமணமானவன். ஆறு பிள்ளைகளை பராமரிக்க வேண்டியிருக்கிறது. இந்த மனுதாரும், திருமணமானவர். விமலசேன என்பவர் அவரது கணவர்.

மனுதாரின் வழ:- விமலசேன என்பவரை மனுதார் திருமணம் செய்தது உண்மையே. ஆனால் மனுதாரர் எதிர் மனுதாருடன் கள்ளத் தொடர்பு கொண்டதால் விமலசேன விவாகரத்து வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கு விசாரணையின் போது மனுதாருடன் கள்ளத் தொடர்பு கொண்டதாக எதிர்மனுதார் ஒப்புக் கொண்டார்.

நீதவான்:- உமக்கும் மனுதாருக்கும் இருக்கும் தொடர்பை ஒப்புக் கொண்டிருக்கிறீர். இப்போது நீர் இதிலிருந்து தப்ப முடியாது. அதனால் பிள்ளைக்கு ஜீவனாம்சம் செலுத்தும்.

எதிர்மனுதார்:- எனக்கு ஆறு பிள்ளைகள்- மற்றவர்களின் பிள்ளைகளைக் கவனிக்க முடியாது.

நீதவான்:- ஆறு பிள்ளைகள் அல்ல, நூற்று ஐம்பது பிள்ளைகள் இருந்தாலும் இப்போது ஒன்றும் செய்ய முடியாது. பிள்ளைக்கு ஜீவனாம்சம் செலுத்தும்.

எதிர்மனுதார்:- ஐயா, மனுதார் கோருவது போல 20 ரூபா செலுத்த முடியாது- சுமார் 5 ரூபா செலுத்துகிறேன்.

நீதவான்:- ஐந்து ரூபாவில் ஒரு பிள்ளையை ஒரு மாதத்துக்கு பராமரிக்க முடியுமா? வீணாகப் புலம்பாமல் ஒரு தொகையை செலுத்தும்.

குழந்தைக்கு ஜீவனாம்சமாக 15 ரூபா வீதம் செலுத்தும்படி நீதவான் இறுதியில் உத்தரவிட்டார்.

(ர)

## அசிட் எறிந்த மீனவரின் தண்டனை ஊர்ஜிதமானது

அசிட் வீச்சு வழக்கொன்றில் ஆறுமாத கடூழிய சிறைவாசம் பெற்ற ஒருவரின் தண்டனை சுப்ரீம் கோர்ட்டிலும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

22 அங்குல வாள் ஒன்றை வைத்துக்கொண்டு வத்தளை, ஹேகித்தையில் 27 வயதுடைய மீன் வியாபாரி ஒருவர் செய்த ஆர்ப்பாட்டம், பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் மீது அசிட் திராவகம் வீசுவதில் முடிவுற்றது.

நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட்ட பி. ஏ. ஸ்டீவன் பெரேரா என்னும் இந் நபருக்கு கொழும்பு மேலதிக நீதவான் ஆறுமாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார் இத்தீர்ப்பை எதிர்த்து அவர் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்தார்.

ஹேகித்தை சந்தியில் பலர் ஆயுதம் ஏந்தி கலவரம் செய்வதாக சிறில் மெரினியஸ் என்னும் மாணவன் பொலீஸில் புகார் செய்ததை அடுத்து இன்ஸ்பெக்டர் குணவர்தன பொலீஸ்காரர் ஒருவருடன் அந்த இடத்துக்குச் சென்றார்.

எதிரி வாளைக் கையில் பிடித்து சுழற்றிக் கொண்டிருக்கவே அதை நிறுத்தும்படி இன்ஸ்பெக்டர் கூறவே கீழ்ப்படியாத எதிரி வீட்டினுள் ஓடிப் போய் கதவைச் சாத்திக் கொண்டார்.

பின்னால் சென்ற பொலீஸார் கதவைத் தள்ளி திறக்கவே எதிரி அவர்கள் மீது அசிட் வீசினார்.

வாதிதரப்பில் அளிக்கப்பட்ட சாட்சியங்களின் போது இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டன.

(ர)

## ஜப்பானியப் பெண்கள் சாதனையை நிலை நாட்டினர்

காட்மாண்டு, மே 31

ஜப்பானியப் பெண்கள் மலையேறும் கோஷ்டி ஒன்று முதல் முயற்சியிலேயே 24,857 அடி உயரமான மூன்றாவது அன்னபூரணா சிகரத்தின் மீது ஏறி சரித்திர சாதனை ஒன்றை நிலைநாட்டியது.

ஆனால் பருவக் கோளாறு காரணமாக சிகரத்தில் ஏறும் இரண்டாவது முயற்சி ஒன்றை அது கைவிட நேரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

30 வயதான திருமதி ஜங்கோ டபேய், 30 வயதான மிஸ் ஹிரோகோ ஹிரகாவா ஆகிய இருவரும் சிகரத்தின் உச்சியை அடைந்ததாக அறிவிக்கப் பட்டது. அவர்களுடன் 38 வயதான ஷெர்பா வழிகாட்டி பஸாங் நிமாவும் உடனிருந்தார்.

முற்றும் பெண்கள் அடங்கிய மலையேறும் கோஷ்டி ஒன்று இமய மலையில் ஏறிய மிக உயரமான சிகரம் இதுவே ஆகும்.

டோக்கியோ பெண்கள் மலையேறும் கிளப்பைச் சேர்ந்த இந்தப் பெண்கள் கோஷ்டியில் 9 பேர் இருந்தனர்.

அதே சமயம் பிரிட்டிஷ் மலையேறும் கோஷ்டி ஒன்று இதுவரை கண்டு பிடிக்காத 26545 அடி உயரமான முதலாவது அன்னபூரணா சிகரத்தின் தென் பகுதி உச்சியை அடைந்திருப்பதாய் லண்டனில் அறிவிக்கப் பட்டது.

உலகின் தலைசிறந்த மலையேறிகளில் ஒருவரான கிறிஸ் பொனின்டன் இக் கோஷ்டிக்குத் தலைவர் ஆவார்.

இந்தச் சாதனை டெலிவிஷனில் காட்டப் பட்டது.

டொன் வில்லியம்ஸ், டோகல் ஹேஸ்டன் ஆகியோர் மலை உச்சியை அடைந்து 15 நிமிடங்களுக்குப்பின் கீழிறங்க ஆரம்பித்தார்கள்.

## பாடசாலை சரிந்தது

திருவனந்தபுரம், மே, 31

கேரளத்தில் உள்ள ஆலாரில் அரசாங்கப் பாடசாலை ஒன்று இடிந்து விழுந்ததால் ஒரு பள்ளிச் சிறுவன் மாண்டான். மற்றும் ஐவர் காயமுற்றனர்.

கடந்த ஜூலை மாதம் ஒரு பாடசாலை இடிந்து வீழ்ந்ததால் குறைந்தது 15 பாடசாலைச் சிறுவர்கள் மாண்டனர்.

## எழுத்தாளர் கைது

மாஸ்கோ, மே 31

ரஷ்ய எழுத்தாளரான அலெக்சாண்டிரோவிச் மெலேதெவ் ரஷ்யாவில் உள்ள ஒபினின்ஸ்க் நகரில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் அறிவிக்கப்படவில்லை.

## கடைக்காரர் மீது எதிரிகள் போத்தல்களை எறிந்தனர்

சுதுவெல்லை கொலை வழக்கின் பூர்வாங்க விசாரணை கொழும்பு பிரதம நீதவான் திரு. ஈ. எப். டி. சில்வா முன்னிலையில் தொடர்ந்து நடத்தப்பட்டது.

மருதானை, கஜவீர ஸ்டோர்ஸ் உரிமையாளரான ஏலியஸ்டி. சில்வாவைக் கொலை செய்ததாக ஐவன் குணவர்தன, லக்ஷ்மண் பெரே, எம். டி. எம். நியாஸ் ஆகியோர் இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர்.

கே. பி. சந்திரசிரி என்பவர் விசாரணையின் போது சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:- சம்பவதினம் பச்சைத் தொப்பியணிந்த மூன்று எதிரிகளும் மக்கள் கூட்டத்தினரும் காலஞ்சென்றவரின் கடையின் முன்னால் நிற்பதைக் கண்டேன். முதலாவது இரண்டாவது எதிரிகள் கையில் போத்தல்கள் இருந்தன. முதலாவது எதிரி காலஞ்சென்றவர் பக்கமாக போத்தல்களை எறிவதையும் இரண்டாவது எதிரியும் ஆயத்தமான நிலையில் இருப்பதையும் அடுத்து கண்டேன்.

போத்தல்களால் தாக்கப்பட்ட காலஞ்சென்றவர் கீழே விழுந்தார். பயம் கொண்ட நான் அந்த இடத்திலிருந்து வீட்டுக்கு ஓட்டம் பிடித்தேன்.

முகம்மது மொஹிதீன் சாட்சியம் அளிக்கையில், சம்பவ தினம் தான் பள்ளி வாசலுக்குப் போகும் போது முதல் எதிரி காலஞ்சென்றவரின் கடை மீது போத்தல்களை எறிவதைக் கண்டதாகவும் போத்தல்களால் தாக்குண்ட காலஞ்சென்றவர் கீழே விழுந்ததாகவும் சொன்னார்.

நீதவான் மேல் விசாரணையை ஜூன் மாதம் 9-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

(ர)

## வீட்டிலிருந்தே பட்டம் பெற புரட்சிகர போதனா முறை

லண்டன், மே. 31

பிரிட்டனின் "திறந்த" சர்வகலாசாலை ஒரு புரட்சிகரமான போதனாமுறை என்றும் உலகின் கல்வி வளர்ச்சிக்கு எதிர்காலத்தில் இது ஒரு முக்கிய பங்கு வகிக்குமென்றும் மவுண்பட்டன் பிரபு கூறினார்.

அடுத்த வருடம் ஜனவரியிலிருந்து ஆரம்பமாகவிருக்கும் பிரிட்டனின் புதுரகமான "திறந்த" சர்வகலாசாலையின் கட்டட வேலைகளை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், பிரிட்டன் அறிமுகப்படுத்தவிருக்கும் இந்த புதிய கல்வித் திட்டம் உலக கல்வி நிறுவனங்களை வெகுவாக கவர்ந்துள்ளதென்று அவர் குறிப்பிட்டார்.

டெலிவிஷன், வானொலி, மின் கணித இயந்திரங்கள் ஆகிய சாதனங்கள் மூலம் வீட்டிலிருந்து கொண்டே பட்டதாரிப் படிப்பை மேற்கொள்ள இக் கல்வித் திட்டம் வசதியளிக்கும்.

ஜனவரி மாதம் 15-ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் இந்த சர்வகலாசாலைக்கு இதுவரை 30,000 பேர் விண்ணப்பித்துள்ளனர். (ர)

## மோட்டார் விபத்து வழக்கு சமரசமாகத் தீர்ந்தது

மோட்டார்விபத்து வழக்கு ஒன்றில் ஒரு குறிப்பிட்ட நஷ்டஈடு தொகையைப் பெற மனுதார் உடன்பட்டதை அடுத்து வழக்கு தீர்த்து வைக்கப்பட்டது.

ரத்மலானை, காலி ரோட் ராஜேஸ்வரி ஹோட்டலைச் சேர்ந்த திரு. மனுவல் தங்கையா என்பவரிடம் இருந்தும் ரத்மலானையைச் சேர்ந்த டபிள்யூ: ஹென்றி பெரேரா என்பவரிடம் இருந்தும் 60,000 ரூபா நஷ்டஈடு பெற பரகஸ்தொட்ட, மில்லெனிய குரூப்பைச் சேர்ந்த திருமதி ஏ. எம். பி. மெண்டிஸ் வழக்கு தொடர்ந்திருந்தார்.

திரு. தங்கையாவுக்குச் சொந்தமான காரை ஹென்றி பெரேரா காலிரோட்டில் செலுத்திவரும் போது நடந்து வந்த தன்னை அக்கார் மோதியதாகவும் அந்த விபத்தால் தனது வலது காலில் முறிவு ஏற்பட்டதாகவும் முன்னெச்சரிக்கையும் கட்டுப்பாடும் இன்றி மிக வேகமாக கார் ஓட்டப்பட்டதாகவும் திருமதி மெண்டிஸ் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

திருமதி மெண்டிஸின் கவனயீனத்தாலேயே இவ்விபத்து நடந்தது என எதிர் மனுதார்கள் தமது பதிலில் தெரிவித்தனர்.

நஷ்டஈட்டுத் தொகையாக 8,750 ரூபா பெற்றுக்கொள்ள மனுதாரர் உடன்பட்டதால் கொழும்பு பதில் மாவட்ட நீதவான் திரு. டி. விமலரத்னவால் தீர்த்து வைக்கப்பட்டது. (ர)

## இலங்கையருக்கு டிப்ளோமா

லண்டன், மே. 31

பிரிட்டனில் உயர்கல்வி பெற்ற ஏழு இலங்கை டாக்டர்களுக்கு சிறுவர் சுகாதார துறையில் டிப்ளோமாப் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. லண்டனிலுள்ள ரோயல் வைத்திய கல்லூரியிலும், இங்கிலாந்திலுள்ள ரோயல் அறுவை வைத்திய கல்லூரியிலும் இவர்கள் கல்வி பயின்றனர்.

டாக்டர் பி. அருளானந்தம், டாக்டர். எஸ். கே. நல்லைநாதன், டாக்டர். லக்ஷ்மன் ஜெயகுரு, திரு மகிந்தா டி ஜெயசிங்கா, செல்வி. சுயாத்தா மானல், டாக்டர். வலேரியன் மடப்புலி, டாக்டர். செனிவரெத்தின பண்டா ஆகியோரே இந்த வைத்தியர்களாவர். (ர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரத்தில் ஒருநாள் மக்களைச் சந்தியுங்கள்

# அமைச்சர்களுக்கு பிரதமமந்திரி அறிவுரை

இராணி மாளிகையில் புதிய அமைச்சரவை நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தனது அமைச்சர்கள் மத்தியில் பேசுகையில், ஐ. தே. கட்சி அரசாங்கத்தின் அமைச்சர்கள் பொதுமக்களிடம் இருந்து விலகி இருந்ததே அந்த அரசாங்கத்தின் படுதோல்விக்கான காரணம் எனக் குறிப்பிட்டார்.

பொது மக்களை தமது காரியாலயங்களில் சந்தித்து அவர்களின் தேவைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த வாரத்தில் ஒரு நாளை ஒதுக்கும்படி பிரதமர் தனது அமைச்சர்களிடம் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர்களின் கருமங்களுக்கு உதவி அளிக்கவும் ஆலோசனை கூறவும் எம். பி. களைக் கொண்ட ஆலோசனைக் கமிட்டிகளை அமைக்க தான் உத்தேசித்திருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். தமது கவனத்துக்கு எம். பி.க்களும் பொது மக்களும் கொண்டு வரும் விஷயங்கள் குறித்து அமைச்சர்கள் விசேஷ கவனம் செலுத்துவதின் அவசியத்தையும் பிரதம மந்திரி வலியுறுத்தினர்.

தாமும் கடமையில் குறித்த நேரத்தில் ஈடுபடுவதோடு தமது சிரேஷ்ட அதிகாரிகளையும் அவ்வாறே ஈடுபடச் செய்ய வேண்டும் என்பதையும் திருமதி ஸ்ரீமாவோ அமைச்சர்களிடம் சுட்டிக் காட்டினர்.

திறப்பு விழாக்களிலும் ஏனைய அதுபோன்ற வைபவங்களிலும் பங்குபற்றி மந்திரிகளை அழைக்காது, அவர்கள் தமது கடமைகளில் கவனம் செலுத்த உதவும்படி தான் பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்க உத்தேசித்திருப்பதாகவும் பிரதமர் தனது அமைச்சர்களிடம் தெரிவித்தார்.

மந்திரி சபை இம்மாதம் 3-ம் திகதி காலை 10 மணிக்கு கூடி அது முதல் பேரயாவுக்கு பின்னர் மூன்றும் நாள் கூடும். அரசாங்க நாடாளுமன்ற குழு இம்மாதம் 6-ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு தனது முதலாவது கூட்டத்தை நடத்தும். (ர)

## தபால், தந்தி அமைச்சர்

தபால், தந்தி தொடர்பு துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட திரு. சி. குமாரசூரியர் வட்டுக்கோட்டை, மூளாயை பிறப்பிடமாக கொண்டவர்.



சி. குமாரசூரியர்

43 வயதுடைய இவர் ஒரு பொறியியல் நிபுணராவார். யாழ்ப்பாணம் சென். பெட்றிக்ஸ் கல்லூரியில் கல்வி கற்ற திரு. குமாரசூரியர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் பட்டம் பெற்று லண்டன் பொறியியல் பட்டமும் பெற்றுர்.

1952-ம் வருடம் முதல் 1960-ம் வருடம் வரை சுகாதார திணைக்களத்தில் பொறியியல் நிபுணராக கடமையாற்றிய இவர் சேவையில் இருந்து விலகி வர்த்தகத் துறையில் ஈடுபட்டார்.

திருமணமான இவர் ஐக்கிய முன்னணியின் பிரபல உறுப்பினர்களில் ஒருவராவார். (ர)

## மட்டக்களப்பு மேயர் மீது நம்பிக்கையில்லா பிரேரணை

மட்டக்களப்பு, மே 31

பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு தொகுதி முடிவுகளின் எதிரொலியாக மாநகரசபை மேயர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர சபையின் பத்து அங்கத்தவர்கள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மேயர் திரு. ஜே. எல். திசவீரசிங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கான முன்னறிவித்தலை மாநகர சபை ஆணையாளர் திரு. ஜே. சி. தம்பி நாயகத்திடம் மாநகர சபை ஏழாம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். வள்ளிசாமி கையளித்தார்.

மேயர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கான பிரஸ்தாப முன்னறிவித்தல் கையொப்பம் இட்டுள்ளவர்கள் பெயர் விபரம் வருமாறு:-

திரு. இ. ஈஸ்வரன் (4-ம் வட்டார அங்கத்தவர்), திரு. ஜே. சண்முகராஜா (17-ம் வட்டாரம்), திரு. அ. அந்தோனிமுத்து (3-ம் வட்டாரம்) திரு. சி. இன்னுசி (12-ம் வட்டாரம்), திரு. ஜே. என் ஹென்றி (2ம் வட்டாரம்), திரு. செ. இராஜதுரை (11-ம் வட்டாரம்), திரு. எஸ். வள்ளிசாமி (7-ம் வட்டாரம்), ஜனுப் பாருக் சின்னலெப்பை (1-ம் வட்டாரம்), திரு. ஆர். கதிரவேலு (10ம் வட்டாரம்), ஜனுப் லத்திப் சின்ன லெப்பை (19-ம் வட்டாரம்).

எதிர்வரும் ஜூன் மாதம் 9-ம் திகதி மாநகரசபை மேயர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறியப்படுகின்றது. (ர-42)

## புனித யாத்திரை

கொழும்பு, ஜூன், 1

புதிய மந்திரிசபையில் இடம் பெற்றுள்ள அமைச்சர்கள் அனைவரும் இம்மாதம் 8-ம் திகதி அனுராதபுரம், கண்டி ஆகிய இடங்களுக்கு யாத்திரை செல்வர்.

கொழும்பில் இருந்து விசேட ரயில்மூலம் அமைச்சர்கள் அனுராதபுரத்திற்கு சென்று வழிபட்டபின், அங்கிருந்து கண்டிக்குச் சென்று தலதா மாளிகையில் தமது நேர்த்திக் கடன்களை முடித்துக் கொள்வர். (ஐ- 15)

## இரண்டு தலை குழந்தை

மசூலிப்பட்டினம், மே 31

இங்குள்ள தலைமை ஆஸ்பத்திரியில் ஒரு பெண் இரண்டு தலையுள்ள ஒரு குழந்தையை நேற்று பெற்றெடுத்தாள்.

இறந்து பிறந்த இந்தக் குழந்தை கண்ணாடிக்குள் அடைத்து வைக்கப் பட்டிருக்கிறது. ஏராளமான பேர் வந்து பார்த்துச் செல்கிறார்கள்.

இது அந்தப் பெண்ணுக்கு ஏழாவது குழந்தை.

## பிரதமருக்கு யாழ். நகரில் வரவேற்பு அளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே- 31

புதிய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்து பொது வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படவிருக்கின்றன. இதற்கான பிரேரணை ஒன்று யாழ்ப்பாணம் மாநகர சபையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

திருமதி பண்டாரநாயக்காவை யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்து யாழ். மாநகர சபை அவரைக் கௌரவிக்க வேண்டும் என்று கோரும் பிரேரணையை மாநகர சபை உறுப்பினர் ஜனுப் எம். ஏ. சி. எஸ். ஏ. காதர் தாக்கல் செய்திருக்கிறார்.

மாநகர சபையின் அடுத்த கூட்டத்தில் இந்தப் பிரேரணை பற்றி விவாதித்து முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது.

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு யாழ்ப்பாணத்தில் வரவேற்பு அளிப்பது சமூகங்களிடையே நட்புறவையும் நல்லெண்ணத்தையும் வளர்க்கப் பெரிதும் உதவும் என்று ஜனுப் காதர் தமது பிரேரணையில் தெரிவித்திருக்கிறார்.

## கூட்டணி மந்திரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) அங்கே கூட்டணி மந்திரி சபையின் கூட்டில் வந்து நின்று பத்திரிகை முதலாவது கூட்டம் நடைபெற் புகைப்படக்காரர்களுக்கு பேரஸ்றது.
கொடுத்தார்கள். ராணி மாளிகைக்கு வெளியே
அதன் பின்னர் ராணி மாளிகை ஆயிரக் கணக்கில் மக்கள் குழுமி யிலிருந்து நடந்து சென்று செனட் இருந்து ஆரவாரம் செய்து புதிய கட்டிடத்தில் உள்ள பிரதமரின் மந்திரி சபை அங்கத்தவர்களை காரியாலயத்தை அடைந்தனர். வரவேற்றனர். (ம)

### புதிய அமைச்சர் அவை

1. பிரதம அமைச்சரும், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரும், திட்டமிடல், வேலைவாய்ப்பு அமைச்சரும்
— திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, எம். பி.
2. நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர்
— திரு. மைத்திரிபால சேனநாயக்கா, எம். பி.
3. வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர்
— திரு. ரி. பி. இலங்கரத்ன, எம். பி.
4. கல்வி அமைச்சர்
— டாக்டர் பதியுதீன் மஹ்மூத்.
5. கப்பற்துறை, உல்லாசப் பயணத்துறை அமைச்சர்
— திரு. பி. பி. ஜி. கலுகல்லை, எம். பி.
6. தொழில் அமைச்சர்
— திரு. எம். பி. டி. இசட்- சிறிவர்த்தன, எம். பி.
7. உள்ளூராட்சி அமைச்சரும், உள்நாட்டு அமைச்சரும், அரசாங்க சேவை நிர்வாக அமைச்சரும்
— திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா, எம். பி.
8. கைத்தொழில், விஞ்ஞானத்துறை அமைச்சர்
— திரு. ரி. பி. சுபசிங்க, எம். பி.
9. நிதி அமைச்சர்
— டாக்டர் என். எம். பெரேரா, எம். பி.
10. போக்குவரத்து அமைச்சர்
— திரு. லெஸ்லி குணவர்த்தன, எம். பி.
11. தோட்டத் தொழில்துறை அமைச்சர்
— டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, எம். பி.
12. நீதி அமைச்சர்
— திரு. ஜாஸே மாரியா ஜெயமான.
13. காணி, விவசாய அமைச்சர்
— திரு. எச். கொபேகடுவ, எம். பி.
14. மீன்பிடித்துறை அமைச்சர்
— திரு. ஜோர்ஜ் ராஜபக்ச, எம். பி.
15. வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர்
— திரு. பீட்டர் கெனமன், எம். பி.
16. தபால், தந்தி தொடர்புத்துறை அமைச்சர்
— திரு. செல்லையா குமாரசூரியர்.
17. சுகாதார அமைச்சர்
— திரு. டபிள்யு. பி. ஜி. ஆரியதாச, எம். பி.
18. தகவல், ஒலிபரப்புஅமைச்சர்
— திரு. ஆர். எஸ். பெரேரா, எம். பி.
19. சமூக சேவைகள் அமைச்சர்
— திரு. ரி. பி. தென்னக்கோன், எம். பி.
20. கலாசார அமைச்சர்
— திரு. சீமகே சலமன் குலத்திலகா.
21. நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சரும் அரசாங்க பிரதம கொரடாவும்
— திரு. கே. பி. இரத்னயக்கா, எம். பி.

இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப பத்திரிகா சமாஜம். 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 1 ஜூன் 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org